ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அருளாளப்பெருமாளெம்பெருமனார்

# அருளிச்செய்த

# பிரமேயஸாரம்

தனியன்

கட்டளைக்கலித்துறை

நீங்காமலென்றும் நினைத்துத்தொழுமிங்கள் நீணிலத்தீர்
பாங்காகநல்ல பிரமேயஸாரம் பரிந்தளிக்கும்
பூங்காவளம்பொழில் சூழ்புடைவாழும் புதுப்புளிமண்
ஆங்காரமற்ற வருளாளமாமுனி யம்பதமே.

நேரிசை வெண்பா

அவ்வானவருக்கு மவ்வானவரெல்லாம்
உவ்வானவரடிமை யென்றுரைத்தார் – இவ்வாரு
கேட்டிருப்பார்க்காளென்று கண்டிருப்பார் மீட்சியிலா
நாட்டிருப்பா ரென்றிருப்பன்நான்.

குலமென்றுயிருப்பலதங் குற்றத்தாலிட்ட
கலமொன்று காரியமும்வேறாம் – பலமொன்று
காணாமைகாணும் கருத்தார்திருத்தாள்கள்
பேணாமை காணும்பிழை.

பலங்கொண்டுமீளாத பாவமுளதாகில்
குலங்கொண்டு காரியமென்கூறீர் – தலங்கொண்ட
தாளிணையானன்றே தனையொழிந்தயாவரையும்
ஆளுடையானன்றேயவன்.

கருமத்தால்ஞானத்தால் காணும்வகையுண்டே
தருமத்தாலன்றி யிறைதாள்கள் – ஒருமத்தால்
முந்நீர்க்கடைந்தா நடைந்தான்முதல்படைத்தான்
அந்நீ ரமர்ந்தானடி.

வழியாவதொன்றென்றால் மற்றவையும்முற்றும்
ஒழியாவதொன்றென்றாலோமென் – றிழியாதே
இத்தலையாலேது மிலையென்றிருந்ததுதான்
அத்தலையாள் வந்தவருள்.

உள்ளபடியுணரி லொன்றுநமக்குண்டென்று
விள்ளவிரகிலதாய் விட்டதே – கொள்ளக்
குறையேதுமில்லார்க்குக் கூறுவதெஞ்சொல்லீம்
இறையேது மில்லாதயாம்.

இல்லையிருவர்க்கு மென்றிறையைவென்றிருப்பார்
இல்லையஃதொருவர்க் கெட்டுமதோ – இல்லை
குறையுடைமைதானென்று கூறினாரில்லா
மறையுடைய மார்க்கத்தேகாண்.

வித்தமிழவின்பம் துன்பநோய் வீகாலம்
தத்தமவையே தலையளிக்கும் – அத்தைவிடீர்
இச்சியானிச்சியா தேத்தவொழில்வானத்து
உச்சியா னுச்சியானாம்.

தத்தமிறையின் வடிவென்றுதாளிணையை
வைத்தவரை வணங்கியிரா – பித்தராய்
நிந்திப்பார்க்குண்டேறா நீணிரயம் நீதியால்
வந்திர்ப்பார்க் குண்டிழியாவான்.

இறையுமுயிரு மிருவர்க்குமுள்ள
முறையும் முறையேமொழியும் – மறையை
உணர்த்துவாரில்லாநா ளொன்றல்ல ஆன
வுணர்த்துவா ருண்டானபோது.

அருளாளப்பெருமாளெம்பெருமானார் திருவடிகளே சரணம்.
பிரமேயஸாரம் ஸம்பூர்ணம்.